கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௪. } பரீதாபி௵ பங்குனிமீ { பகுதி ௧௨.

கேள்வி.

பெறுதற்கரிய இம்மானிடப்பிறவிக்கும் மற்றப்பிறவிகளினு முள்ள விசேட மெல்லாம், நல்லதன் நலனும் தீயதன் தீமையையும் பகுத்தறிதற் கருவியாகிய மனமென்னும் இந்திரியத்தை அது விசேடமாகப் படைத்திருத்தலேயாம். இம்மன விந்திரியம் இல்லையேல், மக்கட் பிறவியேயாயினும் அது விலங்கின் பாற்பட்டு மாக்கள் என்ற வேறு சாதியாமென்பது முன்னோர் கொள்கை. இதனை "மாவு மாக்களும் ஐயறிவினவே-மக்கடாமே யாறறி வுயிரே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிக. மனம் ஆறும் இந்திரியமாதலை, "மனஷஷ்டாணிந்த்ரியாணி" என்ற கீதா வாக்யமும் வற்புறுத்துவதாகும்.

மக்களது பகுத்தறிதற் கருவியாகிய இம்மனப் பொறியானது ஏனை மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற இந்திரியங்களை நடத்துந் தலைமையும் இன்றியமையாமையும் உடையது. இம்மன மொன்றில்லையாயின், ஏனையவை தம் தொழில்களைச் செய்யா. இவ் வைம்பொறிகளுடன் மனம் உடனின்று நடத்துவதாலே தான் இவ் வுலகப் பேறுகள் யாவும் சித்திக்கின்றன. இவற்றுள் ஆன்ம கோடிகள் இம்மை மறுமைப் பேறுகளை அடைதற்கு இன்றியமையாத காரணமாயுள்ளது, மனமுஞ் செவியும் சேர்தலாகும். இதுவே 'கேள்வி' யெனப்படும்.

கேள்வியாவது: கேட்டற்குரிய பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டலாம். இது, கற்றார்க்கும் கல்லாதவர்க்கும் ஒப்ப வேண்டத்தக்க தொன்று. கல்லாதவர் பெரியோர் சொல்லிய உறுதிகளைக் கேட்பாராயின் தாமும் கற்றவர் போன்ற அறிவை எளிதிற் பெறுவர். கற்றோர் அங்ஙனங் கேட்பாராயின், தங்கல்வியினுடைய அறிவைப் பின்னுஞ் சிறப்பித்துப் பெருக்கியவராவர்.

இங்ஙனம் கற்றார் கல்லார் இருவர்க்கும் ஒப்ப உயர்தர ஞானத்தை ஊட்டவல்ல கேள்வி விளையும் நிலங்கள் கற்று முதிர்ந்த அறிஞர் குழுமிய கழகங்களேயாகும். ஞானங்களின் பிறப்பிடமாதல் பற்றியே, அவையையும், அவைத் தலைவனையும் "நமஸ் ஸபாப்ய: ஸபாபதிப்யஸ்ச வோ நம:" என்று வேதமும் வாழ்த்தி வணங்குவதாயிற்று. நம் வேத வேதாங்கங்களும், இதிகாச புராணங்களும், இக் கேள்வியாலன்றோ, புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்தை இன்றுவரை அலங்கரித்து வருகின்றன? வேதத்துக்குக் கேள்வி எனப் பொருள்கொண்ட "சுருதி" என்பது பெயராக வழங்குவது கண்டு கொள்க. இக்கேள்வியானது முதற் பொருளாகிய கடவுளை அறிந்துய்தற்குரிய உபாயங்களுள் முதலாவதாம். சிரவணமாகிய இதன் சிறப்பு, "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்னும் பொது மறையால் அறியத்தக்கது.

பலநூல்களைப் பலகாலும் கற்றும் கேட்டும் துருவி யாராய்ந்த பெரியோர் அவையினின்று கேட்கப்பெறும் விஷயங்கள் எத்துணை அருமை பெருமை வாய்ந்தனவாதல் வேண்டும்? நல்லூழும் பெரு முயற்சியுங் கொண்டு பல்லாண்டு பயின்று தெரிதற்குரிய அரும்பொருள்களை எளிதிற் பெறச் செய்வது இக்கேள்வியேயன்றோ? ஆதலால் கல்வியினும் சிறப்புவாய்ந்தது இக்கேள்வி என்பது பெறப்படும். இது பற்றியே, "கணக்கினை—முற்றப் பகலு முனியா தினிதோதிக், கற்றலிற் கேட்டலே நன்று" என்றார் முன்னோரும். ஞானவிருத்தி குறைந்துவிட்ட இக்கலியுகத்தே, கேள்வியின் நிலைக்களமாகிய சங்கங்களினின்றே நம் சக்திகளைப் பெருக்க வேண்டியிருத்தலால், ஞானாபிவிர்த்திக்கு இச்சபைகளே இன்றியமையாத சாதனங்களாகும். "ஸங்கே சக்தி: கலௌயுகே" என்ற

ஸ்மிருதியின் கருத்தும் இதுவேயாம். இச்சங்கங்களின் வாயிலாக அடையும் கேள்வியினையே,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம், செல்வத்து ளெல்லாந் தலை" என்று நாயனாரும் சிறப்பித்தருளினார்.

பெரியோர் குழுவினின்று உயர்ந்த விஷயங்களை எத்துணையளவாகக் கேட்பினும், அது பெரும்பயனை விளக்கும். "எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்—ஆன்ற பெருமை தரும்" என்றார் தெய்வப்புலவர். கேட்பவை சிலவேயாயினும், விடாது பெரியோரை அடுத்திருந்து கேட்குமிடத்து, அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி அறிவுப்பெருக்கெடுக்கும் என்பது இதன் கருத்து. இங்ஙனம் ஞான விளைவுக்கேதுவாகிய கேள்வி என்னுங்கருவியால் துளைக்கப்படாத செவிகள், அவை ஓசையறியுந் துவார முடையவாயினும், செவிடுகளே யாகுமென்க. "பாட்டு முரையும் பயிலா தனவிரண்—டோட்டைச் செவியு முள" என்றார் ஔவையாரும். கேள்வித்துளைபெறாத ஒருவனுக்கு இம்மைச்செல்வமும் இயற்கையறிவும் நிரம்ப விருப்பினும், இருமைப்பயன்களும் அவனுக்கில்லையாம்.

"இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும் வானிரவியெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்வீடுந் தெரியா வன்றே."

இதனால், கேள்வியின் ஆவசியகம் வற்புறுத்தப்படுதல் காணலாம். கல்வியாகிய கண்ணில்லாதவர்க்கும் இக்கேள்வியானது ஊன்று கோலாய் நின்று உதவுவதன்றோ? "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு—புண்ணுடையர் கல்லா தவர்" என்றதனால், கல்லாதவரை கண்களற்ற முழுக்குருடராகக் குறிப்பிட்ட நாயனார்,

"கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

என்றார். இதனால், முன் கூறியபடி கல்லாராகிய குருடர்க்கு, இக்கேள்வியிருப்பின் அது அக்குருட்டு நிலையினும் உதவக்கூடிய ஊன்று கோல்போலாகும் என்பதுதெய்வப்புலவர் உள்ள மாதலும்காண்க.

இத்தகைய கேள்வி மிகப்பெற்றவர்கள் அதன் ரஸத்தையே பானம் பண்ணி துன்பமென்பதறியாது இன்பம் அடைபவராதலின், வள்ளுவனார் இன்னோரை அவியுணவின் ஆன்றாராகிய தேவரோ டொத்தவராகப் புகழ்வர். தம்மை வியத்தலும், பணிந்தமொழிக ளில்லாமையு முதலிய தீக்குணங்களெல்லாம் பெரியாரை அடுத்துக் கேள்வி செய்யாமையால் வருவனவே. "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய—வாயின ராத லரிது" என்பது பொய்யாமொழி. இத்த கைய செவிச்சுவைகளின் பரமானந்தத்தை யுணராது வாய்ச்சுவை யொன்றையே அறியும் ஐயறிவினராகிய மாக்கள் இருப்பதும் இரா ததும் ஒன்றே என்னுங்கருத்துப்பட, "செவியிற் சுவையுணரா வா யுணர்வின் மாக்கள், அவியினும் வாழினு மென்" என்றனர்நாயனார்.

இவற்றால், கேள்வி என்பது, ஆன்மாவின் ஞானபிவிர்த்திக் குரியதாய் வீட்டிற்கேதுவாமென்பதும், அது கற்றார்க்கும் கல்லார்க் கும் ஒப்ப உறுதி பயப்பதென்பதும், அஃதின்றேல் மானிடப்பிறவி பயனற்றுக் கழியுமென்பதும், நல்லோர் குழுமிய அவைகளே கேள் வித்தானமா மென்பதூஉம் ஒருவாறு விளங்கும். இத்தகைய கேள் விப் பெருக்கு எங்கும் ஓடி வெள்ளமிடும்படி செய்வது, பரமோ பகார மென்பது சொல்லவேண்டா. அதற்குரிய சங்கங்கள் நாடெ ங்குந் தழைத்து ஞானம் விளைப்பனவாகுக.

பத்திராதிபர்.

மாலினீ மாதவம்.

அத்யாயம் 20.

சிறைமீட்டல்.

Release.

(312-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதற்குள், நமது பரதேசியே வேஷதாரியாய் வந்திருக்கின்ருர் என்பதும், அம்மங்கையின் பூர்வ விருத்தாந்தங்களும், அவள் நமது, பரதேசியாரின் ஸகோதரி யென்பதும், நமது நண்பர்கள் ஊஹித்துக் கொண்டிருக்கலாம்.

ஆஹா! எவ்வளவு காலமானுல்தானென்ன? அன்புக்குக் காலாவதி யுண்டோ? ஸஹோதரவாஞ்சை சிறிதேனும் குறையுமா? அம்மாது திடீரென்று மறுபடி மூர்ச்சையானதும் நமது பரதேசியார், மறுபடி யவள்முகத்தில் தண்ணீர் தெளித்து பக்கத்திலிருந்த விசிறியால் வீசவே மறுபடி மூர்ச்சை தெளிந்தெழுந்தாள்.

என்ன ஆச்சர்யம்! இவ்வளவு அவதிகளுக்கு நடுவிலும், நமது பரதேசியார் கொஞ்சமேனும் மனங்கலங்காது,

“ வடதிசை சாய்ந்தாலென்ன?
தென்திசை யுயர்ந்தாலென்ன?”

என்றபடி தைர்யமாய்த் தன் கார்யத்திலேயே கண்ணுய் நின்ருர்.

அம்மாது எழுந்ததும் மறுபடி பரதேசியாரை நோக்கி ‘ஐயனே! தாம் யாரோ? ஏழை மீது தாம் இவ்வளவு கருணை கொள்ள நான் என்ன புண்யம் செய்தேனே?’ என்று தீனமாய் வினவ,

பரதேசி:—தன் சோகத்தை யடக்கிக் கொண்டு, “கண்மணி! என்னருமைச் சகோதரி”

அம்மாது:—“ஆ! அண்ணு! தாங்கள்தாணு! தாங்கள் தாணு! அண்ணு! அண்ணு!” என்று ‘கோ’ வென்று அலறி அவர் மார்பு மேல் சாய பரதேசியார், தன் கைகளால் அவள் முகத்தைத் திருப்பிக் கண்ணீரைத் தன் துணியால் துடைத்தார்.

அம்மாது:—"அண்ணா! தாங்கள் இவிடம் வந்த காரணமென்ன? நானிருக்குமிடம் தாங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்."

பரதேசி:—"கண்மணி! காலதாமதமாகின்றது. இதைப்பற்றிப் பின்பு விவரமாய்ச் சொல்லுகின்றேன். வந்த கார்யத்தைப் பார்க்க வேண்டும். அவஸரம். தாமதிக்கலாகாது."

அம்மாது:—ஐயோ! என்னோடு போகாமல், தாங்களும், இப் பாதகர் வலையிலகப்பட்டுவிட்டீர்களே! எவ்வாறு தப்பிப்பது?"

பரதேசி:—கண்ணே! அந்த விசாரமுனக்கு வேண்டாம்! எல்லாம் வல்ல ஈசன் அருள் நமக்கிருப்பின் ஆகாதென்பதும் நமது அகராதியிலுமுண்டோ!

அம்மாது:—அண்ணா! இதோ தயாராயிருக்கிறேன். தங்கள் சொற்படி நடக்கின்றேன்!

பரதேசி:—"இன்னும் வந்த வேலை முற்றிலும் முடியவில்லை. உன்னைப்போலின்னொருவர் சிறைப்பட்டிருக்கின்றார்."

அம்மாது:"—ஆத்திரமாத்திரத்தில் அதையுமறந்துவிட்டேன் இன்னொரு அறையில் புதிதாய் ஒருவர் சிறைப்பட்டுச் சுமார் இரண்டு மாதங்களாகின்றன. அவனை மீட்டினால் எவ்வளவோ புண்யமுண்டு."

பரதேசி:—"எங்கே புறப்படு, வழிகாட்டு!" என இருவரும் புறப்பட்டு, சற்று தூரம் அச்சுரங்கத்தின் வழியே மினுக்கு மினுக்கென்றெரியும் தீபவொளியிற் செல்லக் கடைசியாய், ஓர் அறையின் பலகணிக்கதவுமுன் நின்றார்கள்.

உடனே தன் வர்த்தி வெளிச்சத்தால் பரதேசி உள் நோக்கினவுடன், அங்கிருந்த வொருவர் திடுக்கிட்டெழுந்து, கதவண்டையோடிவந்து, பரதேசியாரைப் பார்த்துவிட்டு, 'கோ' வென்று கதறிக்கொண்டு அப்பலகணிக் கதவுமேலேயே சாய்ந்தார். இதுவரை தைர்யமாயிருந்த நமது பரதேசியார், 'அப்பா! தினகர! என்னப்பனே!' என்றலறினார்.

பக்கத்திலிருந்த அம்மாது, 'அண்ணா! ஏது தாங்கள் கூட இவ்வாறு சோகத்துக் குள்ளாயினீர்கள். அபாயமோ தலையேல்

தொங்குகின்றதே! சீக்கிரம் தப்பிக்க வழி பார்க்கவேண்டாமா, என்று வினவ,

பரதேசி மறுபடி தைர்யமடைந்து: தன் கையிலிருந்த பற்றுக்குறடால், அக்கதவின் கீல்களை நெம்ப, உடனே கதவு திடீரென்று விலகிற்று.

பரதேசி உட்சென்று தினகரனுக்கு ஆசுவாஸப்படுத்தத் தினகரன் மறுபடி "என்னையனே! என்னாண்டவனே! ஐயோ என் மாதவ! என் மாதவ! ஐயையோ!"

பரதேசி:—அப்பா தினகர! நீ ஆண்பிள்ளையாயிருந்தும் இவ்வாறு பரிதபிக்கலாமோ?"

தினகரன்:—"என்னையனே! முதலாவது என் மாதவன் உயிருடனிருக்கின்றனா சொல்லுங்கள். ஐயோ! என் ஆவி துடிக்கின்றதே."

பரதேசி:—"அப்பா தினகர! மாதவன் உயிர் உன்கைகளிலிருக்கின்றன. இனிக் கொஞ்சமேனும் காலதாமத மன்னியில், தைர்யமாய் நான் சொல்லுவதைச் செய்வாயாகில், அவனைக் காப்பாற்றலாம்."

தினகரன்:—"என்னாண்டவனே! இதோ தயாராயிருக்கிறேன். நீங்கள் சொல்லுவதை யெல்லாம் கேட்கின்றேன். என் நண்பன் மாதவனை நாளைக்காலைக்குள் நான் பார்ப்பேனோ? இல்லாவிடில் இதோ—என்—உயிர் துறந்து விடுவேன்."

பரதேசி:—தைர்யமாயிரு! என் பின்னேவா! என்றழைக்க மூவரும் அச்சுரங்கத்தின் வழியாய்ச் சற்றுதூரம் சென்று கடைசியாய் அதன் முடிவுக்கு வந்தார்கள். பரதேசி அக்கம்பக்கத்தில் சுற்றிப்பார்த்துவிட்டு, வீரா வேசத்துடன் ஆங்கிருந்த ஓர் பாறையை நகர்த்த அதன் வழியாய் மூவரும் வெளி யேறினார்கள். "ஜல்தி, ஜல்தி" என்று பரதேசி யார் எச்சரிக்க மூவரும், மங்கின நிலாவொளியில் கள்ளன் கோட்டையினின்றும் வெளியே ஓடினார்கள்.

அத்யாயம் 21.

தூக்குமேடை.

The Gallows.

காலை சுமார் 7-மணியிருக்கலாம். மதுரை புதுஜெயில் ப்ராகாரத்துக்கு வெளியே உள்ள பெருஞ்சாலையில் திரள் திரளாய் ஜனங்கள் கூடியிருக்கின்றார்கள். "ஐயோ! அங்கென்ன வேடிக்கை? இதொரு விநோதமா உங்களுக்கு? நரிக்குக்கொண்டாட்டம் நண்டுக்குப்ராணாவஸ்தை? ஐயோ! இந்தப் பாவத்தைப்பார்க்கவும் இம்மூடஜனங்கள் இவ்வாறு கூடுவார்களா?" என்று சிலர் தீனமாய் ப்ரலாபித்துக்கொண்டு "கொடுமை" கொடுமையென்று கதறிவிட்டுத் தங்கள் வழியே சென்றார்கள். ஆயினும் அனேகர் ஆங்குநடக்கப்போகிற விசேஷத்தைக் கண்ணுற ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

வெளியே நின்றவர்களுக்கு, ப்ராகாரத்துள்ளிருக்கும தூக்கு மேடை தெரிகின்றது. அம்மேடை மீது இரண்டுஸ்தம்பங்கள், உயரமாய் நிமிர்ந்து நிற்க அவைகளின் உச்சியிற் போட்டுள்ள குறுக்கு மரத்தினின்றும், காலபாசம் போன்ற ஓர் கயிறு, ஓர் ரோதையில் தொங்குகின்றது. அக்கொடுங்காட்சியைக் கண்ணுற்றால், 'கொண்டுவா! பலிகொண்டுவா!' என்று அத்தூக்குமரம் கோஷிப்பதுபோல் தோன்றும். ஐயோ தூக்குமரமே! நீ எத்தனை பேர்களைக் கொன்றிருக்கின்றாய், ஐயோ! உனக்குத்தயை என்பது கிடையாதா? ஆமாம் நீ அசேதனந்தானே! பகுத்தறிவுடைய ப்ராணிகளே, அவைகளிலும் மானிடர்களே, இவ்வாறுகொடுமைகள் செய்யத்துணிகின்றார்களே. நீ என்னசெய்வாய், நீ கேவலம்சாதனமாத்ரமாய்த்தான் விளங்குகின்றாய், இன்றைக்கு உனக்குப் பலியாக நியமிக்கப்பட்டிருக்கும் மாதவனுடைய குண குணங்களை நீ எவ்வாறு அறிவாய், அவன் இவ்வாறு அவதிக்குட்பட எத்தனை காரணங்கள் ஏற்பட்டுவிட்டன. இவைகளையெல்லாம் உற்று நோக்குமிடத்து, தர்மா தர்மங்கள், ந்யாயாநியாயங்கள், ஈசுவராதீனமா? அல்லது கேவலம் ஸம்பாவிதங் (Accidents) களா? என்றும் சங்கையுண்டாகின்றன.

நமது மாதவனுடைய சரித்திர மூலமாய், டார்வின் கூறிய ‘பிழைப்புக்கு மன்றாட்டம்’ (Struggle for Existence) என்ற சித்தாந்தமும், நமது முன்னோர்கள் கூறியபடி ‘மன்னுயிர் கொன்று தன்னுயிர் காத்தல்,’ (ஜீவோ ஜீவஸ்ய ஜீவதி) என்ற சித்தாந்தமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விசதமாகின்றனவே.

சிறிது நேரத்துக்கெல்லாம் திடீரென்று எங்கும் நிச்சப்தமாயிற்று. எல்லோர் கண்களும் தூக்குமேடையை நாடின. ஐயோ! என்ன நடந்தது! என்னவிபரீதம்! யமகிங்கரர்போன்ற இரண்டு ஜெயில் வேலைக்காரர், நமது மாதவனைத் தூக்குமேடைக் கழைத்து வந்தார்கள். என்னகாலம்! என்னகோலம்! மாதவ இதுவும் உன் விதியோ! என்ன நிச்சயிப்பது. உண்மை என்னவென்று சொல்லுவது! அவன் குற்றவாளிதானா? அப்படியானால் அவன் தண்டனையடையவேண்டியது தகுதியே. நமது சரித்திரத்தின் பூர்வ அத்யாயம் வாசித்தவர்கள் இதை நம்பார்களே. கொலைசெய்யப்பட்டதாய் ருஜுவான தினகரன் உயிருடனிருக்கின்றானே. அப்படியிருந்தும் மாதவன் சிறிது நேரத்தில் கொலைக்குற்றத்துக்காக உயிர் துறக்கப்போகின்றானே! கொலையே நடந்திராதபோது கொலைக்குற்றமேது. இதுதான் விதியெனப்படுவது. விதியை மதியால் வெல்லமுடியாதெனக் கூறும் விதிபலவாதி (Fatalists) கள் கூறும் சித்தாந்தமும் உண்மையாய் விட்டதே! இப்பொழுது மாதவன் மரணத்துக்குயார் ஜவாபுதாரிகள். சட்டமா? அல்லது சட்டத்தையுபயோகித்த ந்யாயாதிபதியா? அல்லது ஸாட்சி சொன்னபேர்களா? யாரைச்சொல்லுவது. எல்லாம் மாயமாய் இருக்கின்றனவே. மாதவன் கேஸைப்போல் எத்தனை கேஸுகளில் வீணான அபவாதத்துக்கு, நிரபராதிகள், எத்தனைபேர் உட்பட்டுச் சட்டத்துக்கிரையாய் உயிர் மாய்ந்திருப்பார்கள். இதனால் உலகத்தில் தர்மம், ஸத்யம், ந்யாயம், என்பதாவது, அவைகளை பக்ஷபாத மின்னியில், நடத்தும் அதிகாரிகளாவது கிடையாதென்றல்லவோ ஏற்படுகின்றது. என்னசெய்யலாம். மனிதன் ஸர்வக்ஞனா? அவன் என்ன செய்யக்கூடும்? ப்ரத்யக்ஷப்ரமாணங்களாலும் அவைகளினின்றும் உண்டாகும் அனுமானங்களாலும் மாத்திரமே மனிதன் ஓர் ஸித்தாந்தத்துக்கு வருகின்றான். அம்முடிவு பிசகாய்

விடுமாயின் அதற்கு அவன் என்னசெய்வான்? ஒரு கார்யம் தர்மவிரோதம், ந்யாயவிரோதம், க்ரமவிரோதமென்று தெரிந்தும் அதை நடத்துபவனே மஹாபாதகன். அப்படிப்பட்ட மஹாபாதகரும் எண்ணிறந்தபேருளர். அதற்குக்காரணம் ஒவ்வொருவனுக்குமியற்கையாயுள்ளதும், ஒவ்வொருவன் ப்ரவிருத்திகளுக்கும் காரணமானவைகளுமான, மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசையென நம்முன்னோர்கள் கூறியுள்ள ஈஷணாத்ரயங்களும், தற்கால லௌகிகத்தையனுசரித்துள்ள கௌரவாசை யென்பதுமே.

அதிகமாய்வளர்ப்பானேன்! நமது மாதவன் முகத்தில் நிரபராதமானது கூத்தாடிக்கொண்டிருந்த போதிலும், தனக்கு நேர்ந்த அபவாதத்தாலும், அதனால் ஏற்படப்போகிற துர்மரண சிந்தனையாலும், மேகமண்டலங்களால் மங்கிய சூர்ய பிம்பம்போல் அவன் முகம வாடியிருந்தது. ஆஹா! உயிர்துறக்க யார்தான் ஸகிப்பார்? அதிலும், தூக்குமரமேறச் சகிப்பாரோ? இந்த நிலைமையில் மாதவன் தூக்குமரத்தடியில நிறுத்தப்பட்டான். ஸர்க்கார் வைத்யன், மாதவன் நாடிகளை ஸ்பர்சித்து 'சரி' (Very well) என்றுவிட்டார். அங்குள்ள அதிகாரிகள் யாவரும் சுமார் 3 நிமிஷநேரம் ஒன்றும் செய்யாமல் அசைவற்று பிணக்கோலம்போல் நின்றார்கள்.

அப்பொழுது மாதவன், கீழ்திசையில் உதித்துப்ரகாசிக்கும் சூரியனைத்தர்சித்து கைகுவித்துப் பிரார்த்திக்கின்றான்.

உலகந்தோன்றிய காலமுதல், ப்ரகாசிக்கும் சூர்யதேவனே நீயே ஸாக்ஷி! நான் மறிப்பதற்குக் கொஞ்சமேனும் மயங்கவில்லை. ஆனால், கொலைக்குற்றத்துக்காகத் தூக்கேறுவதே என் மனத்தை வருத்துகின்றது. இவ்வுலகில் மனிதன் ஜன்மமெடுத்ததற்குப் பலன், தனக்காவது சுகமிருக்கவேண்டும். அல்லது பிறருக்காவது உபயோகமாயிருக்கவேண்டும், இரண்டுங்கெட்ட தூர்ப்பாக்யனான நான் இருந்தென்ன? இறந்தென்ன? மாலினீ! என் கண்ணே!—ராஜகுமாரி!—அம்மா! நீ இனிமேலாவது சௌக்ய மடைவாய்! நான் நிரபராதியென்பதை நீயாவது உணர்ந்திருப்பாய் என்ற ஒரு திருப்தியே எனக்கு இத்துன்பங்களின மத்தியில் போதும். என்னை ஜநகாயும் தந்தையினுமதிக அபிமானத்துடன் வளர்த்த உன் தந்தைக்கு என் வந்தனத்தைக் கூறுவாய்.

எல்லாமறிந்த ஈசனே! இதுவும் உன் திருவுள்ளமோ? 'அவன வன்விதிப்படியனே அடைவது கடமையல்லவா?

என்று பலவாறாகத் தியானித்துக்கொண்டு,யோகநித்திரைகொண்டவன்போல் கிழக்கு நோக்கி ஸ்தப்தமாய் மாதவன் கண்மூடி நிற்க ஜெயிலதிகாரியின் ஜாடையின் பேரில் இரண்டு கொலையாளிகள் மாதவனருகிற்சென்று, ஓர் குல்லாவைபவன் தலையில்மாட்ட அமிழ்த்து, அவன் முகம்முழுதும் மூடிற்று. அதைக்கழுத்துடன் சேர்த்துக் கட்டிவிட்டு, தூக்கு ஞாணுக்கு நேரே யவனை நிறுத்தி, தூக்குச்சுருக்கையவன் கழுத்தில் மாட்டினார்கள்.

இக்கொடுமையைக் கண்ணுற்றோர் யாவரும் ஐயோ! ஐயோ; என்றலறினார்கள். ஐயோ! கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே! ஐயோ அன்யாயமாய் நிரபராதியான ஒரு ஜீவன் சற்று நேரத்தில் உடலினின்றும பிரியப்போகின்றதே! ஜெயில் வேலைக்காரர்; சொருகுபலகையண்டை தயாராய்க் காத்துக்கொண்டு, அதையிழுக்கத் தயாராய் தங்கள் எஜமானன் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார்களே!

'ஒன்று!' (One) என்று கூறினன் அதிகாரி

ஐயோ அநாதமாய்ப்போயிற்றே. தர்மந்தலைகாக்கவில்லையே;

'இரண்டு' (Two) அடடா! என்னபாவம்! இது சட்டக்கொலையோ!

"மூ............"— "என்று அதிகாரி கூறுமுன் ஹா ஹா நில்லு! நில்லு! பொறு! பொறு! சற்றுபொறு! கொல்லாதேயுங்கள்! அவன் கொல்லவில்லை—அவன் குற்றவாளியல்ல" என்று ஓர் பேரிரைச்சல் உண்டாயிற்று.

எதிர்பாராது அச்சாவுகோலமத்தியால் இவ்வளவு துணிவாய் ஏற்பட்ட பேரிரைச்சலால் எல்லோரும் திடுக்கிட்டு நின்றார்கள்.

'மூன்று!' (Three) சொல்லவாயெடுத்த ஜெயிலதிகாரி 'மூ... ...' என்று மூடிவிட்டான் 'பலகையிழுக்கத்தயாராயிருந்த வேலைக்காரர் திகைத்து அப்படியே நின்றுவிட்டார்கள். இதென்ன அதிசயம்! இது மாதிரி இதுவரை சம்பவித்ததில்லையே. ராஜதண்டனையைச் சிரமேல்வகித்து நிறைவேற்ற நிற்கும் இஜ்ஜெயில் அதிகாரிகளை மந்திரத்தால் கட்டுண்டவர்போல மயக்கிய அப் பேரிரைச்சல் யாது?

எல்லோரும் சத்தம்பிறந்த திசை நோக்கினார்கள். அதிவேகமாய் ஓர் குதிரைவண்டி ஜெயில் வாசலில் நின்றது. அதனின்றும், இரண்டுபுருஷர்களும், ஒரு ஸ்த்ரீயும் குதித்தார்கள்.

"நில்லு! நில்லு! பொறு! பொறு" என்று சப்தித்துக்கொண்டு, தங்கள் உயிரைப் பொருட்டாய் எண்ணாமல், பக்கத்திலிருந்த வாயிற்காப்போனைக் கூடலக்ஷியம் செய்யாமல், உட்புகுந்து அதிவிரைவாய் தூக்குமேடை ஏறினார்கள். அவர்களில் அதிவயதானவர், அதிக தைர்யத்துடனும், வந்தது வரட்டுமென்ற தெம்புடனும் தன்கையிலிருந்த கத்தியால் தூக்குநாணைச்சேதித்தார்.

உடனே பக்கத்திலிருந்த தினகரன் "அப்பா என்மாதவா!," என்றலறியவனை இறுகத்தழுவி, அப்படியே செந்தூக்காத்தூக்கிக்கொண்டு, அப்புறமகன்றான். இப்பொழுது நடந்த விருத்தாந்தமெல்லாம் க்ஷண நேரத்தில் நடந்தனவாதலால், அங்கிருந்த ஜெயிலதிகாரிகளுக்கு இன்ன நடக்கின்றது, இன்ன செய்வதென்ற ஸ்மரணையேயற்று ஓர் கனவுகண்டவர்கள்போலவும் மந்திரத்தால் கட்டுண்டவர்போலவும் சித்திரப்பாவைகள்போல ஸ்தப்தமாய் நின்றார்கள்.

மயக்கம் தெளிந்து விழித்தார்கள். சிறிதுநேரத்துக்கெல்லாம் எல்லாமாயமும் கதிரவனைக்கண்ட இருள்போலகன்றன. கொலைசெய்யப்பட்டதாய் ருஜுவான தினகரன் உயிருடன் எதிரே நிற்கின்றான். மாதவன் உயிரும் தப்பித்தது. எல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள். சிறிது நேரத்தில் அநேகவிடங்களுக்குத் தந்திஸமாசாரங்கள் பறந்தன. 'தூக்கை நிறுத்து' என்று மேலதிகாரிகள் உத்தரவும் வந்து விட்டது.

அதிகமாய் வளர்ப்பதேன், மாதவனும் தினகரனும், அம்மாதும், நமது பரதேசியும், பரஸ்பரம் ஆலிங்கனம் செய்து கண்ணீர் சொறிந்தார்கள்.

அங்கிருந்த ஜனங்களெல்லோரும் ஆச்சர்யத்தால் ஆரவாரஞ் செய்தார்கள்.

அத்யாயம் 22.

பாதகன்.

The Wretch.

" தன்வினை தன்னைச் சுடும். "

இப்ரபஞ்சத்தின் கண்ணுள்ள ஸமஸ்த சராசரங்களும் சேதனங்களெனவும் அசேதனங்களெனவும் இருவகையாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள், சேதனங்களென்பவைகள் உயிர், மனம், புத்தி, ஸங்கல்பம், விகற்பங்களென்னும் அற்புத சக்தி வாய்ந்தவைகளாயிருக்கின்றன. ப்ராணிகளிலும் விசேஷமானது மனிதஜன்மமே. மற்றப்ராணிகளைப் பார்க்கிலும், மனிதனுக்கு விசேஷ அறிவையும், தர்மம், அதர்மம், ந்யாயம், அந்யாயம், நல்லது, கெட்டது என்ற பகுத்தறிவையும் கடவுள் கொடுத்திருக்கின்றார். இவ்விசேஷ அறிவின் பயனை அனுபவியாது கேவலம் இதர மிருகங்களைப் போல் ஸஞ்சரிக்கும் மனிதன் மிருகத்திலும் கேடுகெட்ட பதிதனாய்ப் போய்விடுகின்றான்.

மேற்கூறிய தர்மாதர்மங்கள், ந்யாயான்யாயங்களெல்லாம் ஸங்கேத (Relative) மாத்ரமாய்த் தோன்றினும், அநேக விஷயங்களில், அவைகள் ஸர்வ ஸம்மதமாயிருக்கின்றன. கொலை செய்தல் திருடல் முதலான தீங்தொழில்களெல்லாம் அதர்மமென்பதில் இரண்டு அபிப்ராயங்களுண்டோ?

ஒவ்வொருவனும் தன் தன் வினைப்பயனை யனுபவிக்கின்றான் என்றும், இப்பிறவி தப்பினும், எப்பிறவியிலாவது அதையனுபவிப்பது நிச்சயமென்றும் கர்ம வாதிகள் கூறுவார்கள். அதன் உண்மை யெப்படியிருப்பினும் சில சமயங்களில் தன் வினைப்பயன்களை இப்பிறப்பிலேயே அனுபவிக்குமாறு, ஸந்தர்ப்பங்களெல்லாம் அவ்வளவு கோவையாக நேர்ந்து விடுகின்றன.

ஒவ்வொருவனும் தான் மாத்திரம் புத்திசாலியாயிருப்பதாகவும், எதிரியவ்வளவு திறமையற்றவனென்றும், எதிரியை ஏமாற்றுவது சுலபமென்றும் எண்ணித் தான் தன் எண்ணங்களை நிறை

வேற்ற முயல்கின்ருன். ஆனல், சில சமயங்களில் தன் எதிரியின் விசேஷ பலத்தால் தானே ஏமாந்து போய் விடுவான். 'கெடுவான் கேடுநினைப்பான்' எனனும் பழமொழியின் உண்மை யப்பொழுது தான் அவனுக்கு வெளியாகின்றது.

அன்று இரவு சுமார் 11மணி இருக்கலாம். மதுரை வெளிவீதியிலுள்ள மணிபுரம் பங்களா மாடியில், ஓர் பெரிய அறையில் ஓர் சோபாவில் சாய்ந்தவண்ணம் நமது ஜமீன்தார் பெருமூச்சுவிட்டு ஆலோசித்துக்கொண்டிருக்கின்றார்.

அவ்வறையானது அநேக விளக்குகளா லலங்கரிக்கப்பட்டிருந்ததாயினும், நடுவில் தொங்கிக்கொண்டிருந்த ஓர் விளக்கின் சிறிது மங்கின ஒளியால், அப்பெரிய அறை ஒருவாறு ப்ரகாசித்துக் கொண்டிருந்தது. மனித அரவமேயின்றி எங்கும் நிசப்தமாயிருந்தது. சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் மாத்திரம், ஓயாது, 'டக்,டக்' என்று அடித்துக்கொண்டு விகலை கலையாகவும், நிமிஷம் மணியாகவும், மணி நாளாகவும், நாள் மாதமாகவும், மாதம் வருஷமாகவும் சென்று மனிதரின் ஆயுள்நாளின் செல்லையும் காலகதியையும் தெரிவித்துக்கொண்டிருந்தது.

"ஆகா என்ன ஆச்சர்யம்! மனித னொன்று நினைக்கத் தெய்வமொன்றல்லவோ நினைத்தது. வரும் விதிப்பயனை யாரால் மாற்ற முடியும். எவ்வளவோ யுக்தியாய் வேலைசெய்தும், அதற்கும் மேலான யுக்திசாலி யொருவர் இருக்கிறதாக வல்லவோ, நிச்சயமாய் விட்டது. இனி என்ன செய்யலாம். காலக்கொடுமையை யாரால் மாற்றக்கூடும். ஓடிவிடலாமா? எங்கு ஓடிவிடுவது? தற்கொலை செய்யலாமா? ஐயோ! இதற்காகவா இந்த ஜன்மமெடுத்தேன்." என்று நமது ஜமீன்தார் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

உடனே அவ்வறைக்கதவு திடீரென்று திறக்கப்பட்டது. ஜமீன்தார் திடுக்கிட் டெழுந்தார். உடனே சேவகன் ப்ரவேசமாகி,'மஹராஜ்' வாசலில் யாரோ, கடுதாசி கொண்டுவந்திருக்கிருர்—மஹராசாவுக்கு—

ஜமீன்தார்:—திடுக்கிட்டு! ஏண்டா! சோணை! அத்தெவாங்கி யாருதானே இங்கே!

சோணை:—மஹாராசா! நாக்குட்டி கேட்டேன்லே! அது ஏதோ ரகசியமாம்——மஹாராசாவிட்ட நேரிலே கண்டு கொடுக்கணு மாய்—

ஜமீன்தார்:—வரச்சொல்!

சோணை:—உத்தரவு! (வெளியே போகிறான்.)

ஜமீன்தார் "யாராய் இருக்கலாம்! இந்நிசி நேரத்தில், அவ்வ ளவு அவசரமாய் நமக்கு—, ஒருவேளை தலைவன்களா யிருக்கலாமோ ஐயோ! பாதகர்கள் இன்னும் என்னைப் பயமுறுத்தக்காத்துக் கொண்டிருக்கிறார்களோ. என் உயிரெல்லாம் அப்பாதகர் கையி லகப்பட்டுத் தவிக்கின்றதே! ஐயோ! மனச்சஞ்சல மில்லாமல் ஒரு க்ஷணமாவது வாழ்வதே நலம். இப்படி எவ்வளவு நாள் காலங்கழி ப்பது? ஐயோ! ஒவ்வொரு க்ஷணமும் கழிவது ஓர் யுகம்போலிரு க்கின்றதே—"

இதற்குள் ஓர் தூதுவன் வேஷம் பூண்ட நமது பரதேசி ப்ர வேசமானார். வந்தவரின் இனத்தை ஜமீன்தார் சுலபமா யறிந்து விட்டார். உடல் முழுதும் கிடுகிடென நடுங்கிற்று. கைகால்கள் பதறின. வந்தவரை 'என்ன' என்று கேட்கக்கூடவாயெழவில்லை என்ன செய்யலாம். வழிதப்பி நடந்தால் வருவன வெல்லாம் அனுப விக்க வேண்டியது தானே! ஆயினும் பரதேசி, அதிக காலதாமதத் துக்கு இடங்கொடாமல்,

"கிருஷ்ணராஜ்!"

"எ-எ-ன-ன!"

"இதோ இந்தக்கடிதத்தைப்பார்!" என்று ஓர் கடிதத்தை ஜமீன்தார் கையில் கொடுத்தார். ஜமீன்தார் கைகால் பதற அதைப்பு டைத்து வாசித்துப் பார்த்தார். ஐயோ! என்ன கண்டார்? நொடிப் பொழுதில் அவர் எண்சாண் உடலும் ஒருசாண்போல குறுகிற்று. 'ஹா!' என்று கதறி யப்படியே சோபாவில் சாய்ந்தார்.

பரதேசி தைர்யமா யருகிற் சென்று, முகத்தில் ஜலம் தெளி த்து மூர்ச்சை தெளிவித்து எழுப்பி உட்கார்த்தினர்.

ஜமீன்தார்:—ஐயோ! என்-ன்-னை-வ-

பரதேசி:—அடே! துஷ்டா! இதைப்படித்தாயா?

பலஹீனமான மனிதனுயினும், சிற்சில சமயங்களில் தப்பிக்க முடியாத நிலைமை வந்ததும், உயிரையே வெறுக்கத் தக்க ஓர்விதக் கோபவெறி வந்து விடுவதுண்டு. இதுவரை பயந்திருந்த ஜமீன்தார், திடீரென்று கோபங் கொண்டு பற்களைநறநறவென்று கடித்து அக்கடிதத்தைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிந்துவிட்டு, சிங்கக் குட்டியைப்போல் உன்னி நமது பரதேசிமேல் பாய்ந்து தன் இடக் கையால் அவர் கழுத்தைப்பிடித்துக்கொண்டு, "அடே! ஆண்டிப் பயலே! நீ என்ன செய்து விடலாமென்று நினைக்கிறுய்?" என்று சொல்லி ஒரே வேகமாய் எதிரிலிருந்த சுவரைநோக்கித் தள்ளிவிட்டார்.

இக்கோலமெல்லாம் நேரிடலாமென்று எதிர்பார்த்து எல்லாவற்றிற்கும் தயாராயிருந்த நமது பரதேசி தைர்யமாய்த்தன் நிலை தவருது ஸ்திரமாய் நின்று கொண்டு பரிகாசத்துடன் சிரித்து விட்டு,

"அடே! துஷ்டா! என்ன என்று நினைத்தாய்? உன் உயிர் என் கையிலிருக்கின்றது. அவ்வளவு லேசாய் உன் எதிரியை எண்ணி விடாதே! அந்தக்கடிதத்தை வாசித்தாயா?

"அடே! ஆண்டிப்பயலே! இனி நீ என்ன செய்வாய்? அந்தக் கடிதந்தான் கிழித்து விட்டேனே!"

பரதேசி:—வெகு அலக்ஷியமாய் கைகொட்டிச் சிரித்து விட்டு "அடே மூடசிரோமணி! பிழைக்கத் தெரியாத பயித்யக்காரா! அந்தக் கடிதம் நீ தலைவர்களுக்கு எழுதியது தானே?" என்றார்.

ஜமீன்தார்:—ஆமாம் அதுவும் தொலைந்து விட்டது—

பரதேசி:—அடே மடையா! நீ கிழித்தது நீ எழுதிய கடிதமேயல்ல. உன் கடிதத்தின் நகல். நீ எழுதிய கடிதம்—

ஜமீன்தார்:—உடனே தன் அபாயகரமான நிலைமையை புணர்ந்து, அருகிலிருந்த சிறு கைத்துப்பாக்கியைத் திடீரென்றெடுத்து,

பரதேசிக்கு நேரே பிடித்துக் கொண்டே "அடே! ஆண்டி! அந்த அசலைக் கொடுத்துவிடு! இல்லாவிடில் இதோ சுட்டு விடுவேன்,—" என்று சொல்ல அவர் கட்டை விரலும், அத்துப்பாக்கியின் விசைப்பக்கம் நாடிற்று.

பரதேசி.—மனதைர்யத்துடன் "அடே மடையா! நீ என்னைச் சுடவும் முடியாது, சுடவும் மாட்டாய். உன் அசல் கடிதம் என் வக்கீலிடம் பத்ரமாயிருக்கின்றது. நான் இங்கு வந்திருப்பதற்குத் தக்க ஸாக்ஷிகள் வெளியே காத்திருக்கின்றார்கள். இன்னும் 5 நிமிஷத்தில் என் நண்பரண்டை நான் க்ஷேமமாய்ப்போய்ச் சேராவிடில் உன் அரண்மனையானது போலீஸ் முற்றுகைக்குட்பட்டு விடும். நீயும் நமது புதுஜெயிலுக்கு ஓர் புது மாப்பிள்ளையாய்ப் போக வேண்டியது தான். உனகதியும் அதோ கதிதான.

கைத்துப்பாக்கி தன்படியே நழுவிக் கீழே வீழ்ந்து விட்டது. இடதுகையால் தன் நெற்றியையிறுகப் பிடித்துக்கொண்டு, "ஐயோ! ஐயோ!" என்றலறி யப்படியே சோபாவில் ஜமீன்தார சாய்ந்தார்.

மறுபடி பரதேசியை நோக்கி "ஓய்! என்னுயிர் உமது கையிலிருக்கின்றது. என்னை ஏன் இவ்வாறு கஷ்டப்படுத்துகின்றீர். என்னைக் கொன்று விடுமே! மன வேதனை பொறுக்க—"

"நாயே! நாயைக் கொன்றால் இறைச்சி கூட உதவாது. உன்னைக் கொன்று எங்களுக்கென்ன ஆகவேண்டும்! நாய்! நாய்! நீ இன்னும் நீடுழிகாலம் உயிருடனிருந்து நீ செய்த பாதகத்தின் பயனை இப்பிறவியிலேயே அநுபவிக்க வேண்டாமா?

ஜமீன்தார்:—"என்னை என்னதான் செய்யச் சொல்லுகின்றீர்? என் மீது இரக்கமில்லையா?"—ஐயோ—நீ-நீ-நீர்-த-ா-ன்—

பரதேசி:—"அடே இரக்கமற்ற சண்டாளா! உன்னுடன் அதிக வார்த்தையாடிக் காலதாமதம் செய்வதேன்? நாயுடன்! அடே! நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லவா! இனி தப்புவது கடினம். இனியாவது சரியாய் நான்சொல்லுகிறபடி"—

ஜமீன்தார்:—என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்! ஐயோ! என்னுயிர் துடிக்கின்றதே! என்னைச் சித்ரவதை பண்ணலாமா?

பரதேசி:—சரி! சொல்லு! மாதவன் யார் தெரியுமா!

ஜமீன்தார்;—ஆ-அ-அ-ந-நா-ன் எ-எ-ன-க்-க்-கு—

பரதேசி:—சீ! நாயே! மறுபடியும் பொய் பிதற்றுகின்றாய், சரியாய்ச்சொல்லுகின்றாயா? அல்லது இப்பொழுதே உன்னைப் போலீஸ் வசம்—

ஜமீன்தார் சரீர முழுமையும் மின்ஸார ப்ரயோகமானது போல் கடுகடுங்கிற்று. இருகைத்தலங்களையும் குவித்து முக மீது வைத்து 'ஹா ஹா!" என்று விம்மி விம்மி யழுதார்.

பரதேசி:—"இப்போ தெரிகின்றதா? அன்று அன்யாயமாய் ஒருவனைத் தூக்குக்கு அனுப்பப் பொய்ஸாக்ஷி சொன்னாயே! அடே பாதகா! தமயனையே கொன்ற துரோகி—!"

'ஆ!" என்றார் ஜமீன்தார் 'இனி தப்புவது அசாத்தியம்' தன்னுடைய பூர்வசரித்ரங்கள் முழுமையும் அறிந்தவன் இப்பரதேசி வேஷம்பூண்ட எதிரி. ஸர்வக்ஞனாகவும் ஸர்வாந்தர்யாமியாயுமிருக்கும் ஈசன் தான் இவ்வேஷம் பூண்டு தன்னைச் சோதிக்கின்றானோ! இல்லாவிடில் எவ்வளவோ ரகஸ்யமாய்ச் செய்த அக்கொடுங்கொலையின் விவரங்கள் 20 வருஷங்களுக்குப் பின் எவ்வாறு வெளியே வரும்! எல்லாம் ஈசன் ஸங்கல்பமே. "அரசன் அன்று கெடுப்பான், தெய்வம் நின்று கெடுக்கும்" "அவனவன் விதிப்பயனை யவனவனே யனுபவியாது யாரனுபவிப்பது." என்று பலவாறு சிந்திக்கலானான்.

பரதேசி:—அடே பாதக! காலதாமதமாகின்றது. சீக்கிரம்நான் வந்த காரியத்தை முடித்துக் கொடுக்கின்றாயா? அல்லது நானே முடித்துக் கொள்ளட்டுமா?

ஜமீன்தார்:—ஐயனே! என்னாண்டவனே! தங்களிஷ்டப்படி செய்கின்றேன். எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தருளவேண்டும்.

பரதேசி:—இடியிடி யென்று சிரித்து விட்டு, 'ஐயோ! கெட்டகேட்டுக்குப் பட்டுக் குஞ்சம் வேறு! இந்தக் கோலத்தில் உனக்கும் உயிருவெல்லமாய்த் தோன்றுகின்றதே! அடே! பெண்ணுறத்

தி செய்ய முயன்ற பாதகா! இதோ தந்தேன்! தந்தேன். உன்னுயிரை! ஆனால் — ஒரு நிபந்தனை மாத்திரம். இனி இவ்வித அக்ரமங்கள் நீ செய்வதில்லை யென்று வாக்களிக்க வேண்டும். இஜ்ஜமீன்தாரிணியை உடையவரிடம் ஒப்புவிக்க வேண்டும். நீ செய்த குற்றங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு எழுத்து மூலமாய் ஓர் வாக்கு மூலம் என் கையில் கொடுக்க வேண்டும். நாய்க்குக் கருப்புக்கட்டி போடுவது போல, உனக்கு நானூறு காசு மாதந்தோறும் கடனழுகச் சொல்லுகின்றேன். சீக்ரம்! பத்ரம்! தெரியுமா?

ஜமீன்தார்;—ஐயனே! என்னை ரக்ஷித்தாலும் நீர்தான், பக்ஷித்தாலும் நீர்தான், தாங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன்.

உடனே பரதேசி தன் உடைப்பையில் தயாராய் வைத்திருந்த கடிதாசியையும், பேனாமைக்கூட்டையும் ஜமீன்தார்முன் வைக்க, பரதேசி கேட்ட கேள்விகளுக் கெல்லாம் கோவையாய்த் தன் விருத்தாந்தங்களை ஓர் * வாக்குமூலமாக எழுதிப் பரதேசியார் கையில் கொடுத்தார்.

பரதேசியும் அதை வாங்கிப் பத்திரமாய் அடக்கம் செய்துகொண்டு, 'அடே கிருஷ்ணராஜ்! ஞாபகமிருக்கட்டும். இனிமேலாவது ந்யாயமாய்ப் பிழை,' என்று சொல்லி யதட்டிவிட்டுச் சரேலென்று வெளியேறினார்.

அப்பாதகன் "ஐயோ! ஐயோ!" என்று கதறிக்கொண்டு அப்படியே சோபாவில் சாய்ந்து மூர்ச்சையானான்.

(இன்னும் வரும்)

B. S. நாராயணஸ்வாமிஐயர்.

குறிப்பு —ஜமீன்தாரின் வாக்குமூலம் இறுதியில் இரண்டாவது அநுபந்தமாய் எழுதப்படும்.

பழகிய மரத்தைப் பாதுகாத்தல்.

பின்வரும் பாட்டு தம் நண்பரொருவர் பாலியத்தே பழகிய மரத்தை ஒரு விறகுவிற்போன் வெட்டுதற்குக் கோடரி தீட்டுதலைப் பார்த்துத் திடுக்கிட்டு விரைந்து சென்று தடுத்து அவன் வேண்டும் பணங்கொடுத்து அதனை என்றும் வெட்டாதபடி அவன்பால் உறுதிப்பத்திரம் பெற்றது கண்டு உள்ளம் உருகிப் பரவசமாகிப் ஜியார்ஜ்மாரிஸ் என்னும் அமெரிக்க கவிவாணர் பாடிய ஓர் ஆங்கிலப் பாவின் மொழிபெயர்ப்பாம். இதன்மூலத்தைப் படித்து மனம் இளகி மகிழாத ஆங்கிலேயர் அரியர் ஆதலால், இதன் கருத்துக்கள் நம்மவரையும் நெஞ்சுருகச் செய்யுமெனனும் நினைவு தூண்ட இம்மொழிபெயர்ப்பை இயற்றினேன்.

விறகுவிற் போனே! விறகுவிற் போனே!
வியனுர் இம்மரம் வெட்டுதல் தவிர்தி.
இதன்சிறு கிளையையும் எறிதரேல்! எறிதரேல்!.
இளமையில் எனக்கி தின்னிழல் ஈந்தது;
ஆதலின் இதனைஇவ் வமயம் காப்பல்யான்.
என்மூ தாதைஎம இல்லினுக் கெதிரே
தன்கையால் வைத்துத தான்வளர்த் ததுஇது.
வைத்த இடத்தே மன்னுக. நின்கைக்
கோடரி கொண்டு குறைத்திட விடுகலேன்.
பண்டை பழகிய பழந்தரு. இதன்சீர்
பாரினும கடலினும் பரவிய திதனைநீ
எறிந்து வீழ்த்திட எண்ணலும் ஆமோ?
வெட்டிடும் நினைவை விட்டிடு. மற்றிது
பலதலை முறைகள் பார்த்தபா தவம். இதன்
மண்பிணி யாக்கை மடிந்திடத் தடிந்திடேல்.
விண்பிணி விருப்பொடு மேக்கு நோக்கி
ஓங்குறும் இதுபிழைத் துய்ய அருளுதி.
தெரியாச் சிறுவனாச் சிறியேன் திரிநாள்
குளிர்தரும் இதன்நிழல் நாடி அமர்ந்துளேன்.
இதன்கீ ழாகஎன் எழிலுடைத் தங்கையர்
மிகுகளி பொங்க விளையாட் டயர்ந்தனர்.

இதுவே அன்னை என்னைமுத் தாடிடம்.
தந்தை எனை அணைத் ததுவும் இத் தலமே.
இவையெலாம் நினைந்தென் இருகண் பனிக்கும்
கண்ணீர் எளிமை கண்டெனை இகழேல்.
மன்ற இம்மரம் நின்றிட விடுதி.
என்றும் மறக்கொணு இனிய தாருவே!
மன்பழ நேய!நின் மரவுரி மாணஎன்
இதயநார் நினைச்சூழ்ந் திறுகப் புல்லுமால்.
பழந்தரு வேநின் பாலுறீஇப் பறவைகள்
பாடுக. திண்கிளை ஆடுக. என்றும்
நெடும்புயற் கிடையாது நிலைநின்று வாழி.
தருஎறி பவ!இத் தானம்விட் டேகுதைக்
காக்கஎன் கையுள காறும்.
தீங்குநின் கோடரி செயஇய லாதே.

V. P. சுப்பிரமணியமுதலியார்.

அகராதிச் சொற்பரீக்ஷை.

தமிழ்ப் பாஷையிலுள்ள நீதிநூல், இதிகாசநூல் முதலிய பல வகை நூல்களையும் படிப்பவர்கள் ஆங்காங்கு வருந் திரிசொற்களின் பொருளறிதல் காரணமாகத் திவாகரம் பிங்கலம் முதலிய நிகண்டு நூல்களையும் கற்று மனனஞ் செய்திருத்தல் பண்டைக்காலந் தொட்டு வந்த பெருவழக்கம். அவ்வழக்கம் இப்போது அருகிப் போயிற்று. இக்காலத்தார் நிகண்டு நூல்கள் வேண்டுவதில்லை; அகராதிகளே அமையும் என்பர். அவர் காரணமாக அகராதிகளும் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பலவாயின. அவற்றுள்ளே ஆதியிலே தோன்றியது சதுரகராதி என்றும், அதன்பின்னர்த் தோன்றியது யாழ்ப்பாணத்து மானிப்பாயில் அச்சிட்ட பேரகராதி என்றும் அறிந்தோர் கூறுவர்.

இப்பேரகராதியிலே ஆங்கிலத்திலே அர்த்தமுடைய சம்ஸ்கிருத அகராதியினின்றும் பெயர்த்துத் தமிழாக்கிச் சேர்த்திருக்கும் சொற்களும் பொருள்களும் பலவாயிருக்கின்றன. அவற்றுள்ளே பல சொற்களும் பொருள்களும் வடமொழி யகராதிகளோடும், அபிதான கோசங்களோடும் முரணுகின்றன. தமிழ்ச் சொற்களுள்ளும் பல நிகண்டு நூல்களோடும், பிறநூல்களோடும் முரணுகின்றன.

அவசீனம், ஆத்துமா, ஆபன், ஆபகை, இருணம் என்பன அவகினம், ஆற்றுமா, ஆபச்சைவன், ஆவகை இரணம் என்பனவாய் மாறிவிட்டன. அவசீநம் - தேள். ஆபன் - அட்டவசுக்களுளொருவன். ஆபகை - யாறு; ஆப - நீர்; கை - போவது. இருணம் - கடன்.

மேலும் தராமரன், பக்திரி, பாகலம், கோட்டம், கோகிலம், படிதம், மௌர்வி, வசந்தகரு, தேறு என்பன தராமான், பசுத்திரி, கூடபாகலம், கொட்டம், கோகுலம், பிடிதம், மௌரவி, வசந்திரு, தேற்று என்பனவாய் மாறிவிட்டன. தராமரன் - பூசுரன். தரா - பூமி. அமரன் - தேவன். பத்திரி - பறவை. பாகலம் - யானைநோய். கோட்டம் - அழுக்காறு. கோகிலம் - கலப்பை. படிதம் - கூத்து. மௌர்வி - விண்ணாண். வசந்தகரு - மாமரம். தேறு - ஒருமரம் இவ்வாறு வேறுபட்டுவருஞ் சொற்களும் பல.

உயிர் வர்க்கத்துள்ளே பல சொற்கள் ஸ்ரீமாந் நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளையவர்களாலே திருத்தித் தமது அகராதியிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில சொற்களும் பொருள்களும் பிழை எனக் கண்டு விலக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய அகராதிகளில் இச்சொற்களும் பொருள்களும் எப்படிச் சேர்க்கப் பட்டிருக்கின்றனவோ தெரிந்திலம்.

அகராதி செய்வோர் இச்சொற்களையும் பொருள்களையுந் திருத்திச் சேர்த்தல் அவ்வகராதிக்கு மேன்மையாகும். வடசொற்களை வடமொழி, அபிதான கோசங்களோடும், இலக்கண நூல்களோடுஞ் சேரநோக்கி நிச்சயித்தல் வேண்டும். தமிழ்ச்சொற்களையும் அங்ஙனம் நோக்கி நிச்சயித்தல் வேண்டும். சான்றோர் செய்யுட் பிரயோ

கமும் அவசியம். ஓரெழுத்து வேறுபடினும் சொல்லும் பொருளும் வேறாய் விடும். அது நிற்க; வேறுஞ் சில கூறுதும்.

அ—சுட்டு. அஃகுல்லி—சிற்றுண்டி. அகம்பிரமம்—அகங்காரம். அசதி—சடுதி. அசதியாடல்—நகல். அசமுகன்—அசமுகாசுரன். அணிமா—ஆன்மாவைப்போலாதல். அணிலன்—அட்டவசுக்களுளொருவன்.

இச்சொற்களும், பொருள்களும் ஆராய்தற்பாலன சான்றும் வேண்டும்.

அ. குமாரசாமிப்பிள்ளை
சுன்னாகம்.

கடவுளிலக்கணம்.

கடவுளென்னும் சொற்குப் பொருள் யாது? அப்பொருளின் இலக்கணம்யாது என்பவற்றை ஆராய்வதே இதன் கருத்து.

கடவுளிலக்கண மென்பது கடவுள் இலக்கணமென்னு மிரு மொழிகள் தொடர்ந்த வொரு தொடர்மொழி. அவற்றுள் முன்னின்ற கடவுள் என்னு மொழிக்கு கட பகுதி உள் விகுதி. பகுதிக்குப் பொருள், கடத்தல். அதில் தல்விகுதிகெட்டு அத்தொழிற் பெயரை யுணர்த்தும் உள்விகுதி புணர்ந்து வகர உடம்படு மெய்யேற்று கடவுள் என்றாயிற்று, செய்யுள் என்பதில் உள்விகுதி புணர்ந்து நின்றாற் போல ஆகவே காரணமாகிய கடத்தலை பெயராக வுடையது கடவு ளென்றவாறு.

இனி பகுதிப் பொருளை ஆராய்வாம். கடத்தலென்றா லெதனைக் கடத்த லென்னுங் கேள்வி யுண்டாகுமன்றே? அக்கேள்வி பற்றி உலகப் பொருள்கள், உயிர்ப்பொருள்களைக் கடத்த லென்னும் பொருள் கிடைக்கும். அப்பொருள்தா னெவ்வாறு கிடைக்கு மெனின் காட்டுதும். உலகமும் உயிருமாய்க் காணப்படும் பிரபஞ்ச

மொன்று, உலகப் பொருளை எனதென்றும் உடலை யானென்றும் அபிமானித் துடல்தோறும் யானெனநிற்குமுயிர்ப்பொருளொன்று, உயிருக்குயிராய் உடலையும் உயிரையுங் கூட்டுவிக்குங் கடவுட் பொரு ளொன்று ஆகப்பொருள்கள் மூன்றுண்டென் றறியப்படும். இவ்வுண்மை பற்றிய கேள்விகட்கெல்லாம் தக்க சமாதானந் தந்து பொருளுண்மை சாதிக்கப் புகின் ஈண்டு விரியுமாதலின் முப்பொரு ளுண்மை யென்னும் வியாசத்தாற் பின்னர் விளக்குவாம்.

இம் முப் பொருள்களுள் கடவுட் பொருளால் கடத்தற் குரி யன ஏனை உயிரு முலகமுமே யன்றிப் பிறிதில்லை யாதலின் அவ்வி ரண்டையுங் கடத்த லென்பதே கடத்தலென்னுஞ் சொல்லிற்குப் பொருளெனத் தெளிக.

இனி கடந்துநிற்ப தொன்றைக் கடந்து நிற்பதென்று கூறுதல் விசேடமன்று. கலந்து நின்றுங் கடந்துநிற்ப தொன்றைக் கடந்து நிற்பதெனக் கூறுதலே விசேடமாம். அன்றியும் கடலைக் கடந்தான், மலையைக் கடந்தா னென்றவிடத்து, கடலையும் மலையையும் பொருந் திக் கடந்தா னென்பதே பொருளாகும். தாண்டினான், பாய்ந்தானெ ன்ற விடத்து மவ்வாறே பொருள் தருதற் கிழுக்கில்லை. ஆதலால் கட த்தலென்றதனாலே கலத்தலு முடனெண்ணப்பட் டுயிர்ப்பொரு ளுலகப் பொருள்களோடு கலந்துங் கடந்தும் நிற்பது கடவு ளென் னுஞ் சொற்குப் பொருளாகும்.

இது பற்றி யன்றே "கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானை" என்றும், "உலகெலா மாகி வேறா யுடனுமாய்" என்றும் "அவையே தானே யாய்" என்று மநுபவமுடையதேசிகர்களருளிச்செய்வார்களாயினர்.

இனிக்கலந்துங் கடந்தும் நிற்பதற்குத் தான் காரணம் என் னையோ வெனின் உபகாரங் கருதியே யென்க. அவ்வுபகாரம் வரு மாறு:—

உலகப் பொருள் சடமாதலானு முயிர் அறிவுடைப் பொருளா யினுஞ் சுதந்தர அறிவின்றாதலானும் சடப்பொரு ளிருத்தற்கு முயிர்ப் பொருளிருத்தற்கு மியங்குதற்கு மிறைவன் கலந்து நின்

றுபகரிக்க வேண்டுவ தவசியமாயிற்று. சடப்பொருளிற் பற்றின்றி அதனை உயிர்க்குக் கூட்டுவிக்கவும், உயிர்ப்பொருளுக் கதனைக் கூடுமா றறிவிக்கவுங் கடந்துநின் றுபகரிக்கவேண்டுவ தவசியமாயிற்று. அறிவித்தபோது மறிந்த வாறு செல்லுதி லாயிருக்கில்லை. உண்டெனின் ஆன்மாவிற்குச் சுதந்தர முண்டெனப் பட்டு வழுவாம். ஆகலின் செல்லுதற் குடனின்று செலுத்தவும் வேண்டும். அவ்வாறுடனின் றுபகரித்தல் கலந்து நிற்றலி லடங்கும். ஆகவே இருத்தல், அறிதல், செல்லுதலென்னு மூவகை யுபகாரத்திற்கும் ஒன்றாய்க் கலந்தும் வேறாய்க்கடந்தும் நிற்பதென அறிக. அறிதலைச் செய்வதற்கு வேறாய் நின்று அறிவித்தலைச் செய்யு முபகாரத்தைக் காட்டு முபகார மெனவும், இருத்தற்குஞ் செல்லுதற்கு மொன்றாய் நின்று இருப்பித்தல், செலுத்துதல் செய்யு முபகாரத்தைக் காணு முபகார மெனவும் வழங்கப் பெறும்.

இனி இலக்கணம் வருமாறு:—எல்லாப் பொருட்குஞ் சிறப்பிலக்கணம், பொதுவிலக்கணமென இலக்கண மிருவகைப்படும். அவற்றுள் தனித்து நிற்றல் சிறப்பிலக்கணம், பிறவற்றோடு கூடி நிற்றல் பொதுவிலக்கணம். உவமை முகத்தாற் கூறுமிடத்து மாவென்றபோது ஒரு சாதி மரத்தையே தனித்து விளக்கலில் அது சிறப்பிலக்கணம். மரமென்றபோது பல சாதிமரத்தையும் விளக்கலில் லது பொதுவிலக்கணம். இனி தேமாவென்றது சிறப்பிலக்கணமும், மாவென்றது மரச்சாதி பலவற்றையுங் குறித்தலிற் பொதுவிலக்கண மெனினுமமையும்.

இனித்தனித்து நிற்பதொன்று வேறுபடாமையினால் சிறப்பிலக்கண மெக்காலத்தும் நிலையுடையதென்றும், பிறவற்றோடு கூடியதொன்று பிரிதலுங் கூடுமாதலின் பொதுவிலக்கணம் நிலைபேறுடையதல்லதென்றுங் கூறப்படும்.

இவ்வாறே அகண்டாகார சச்சிதாநந்த வியாபகமாகிய பரவெளியே கடவுளின் சிறப்பிலக்கணம். இது ஞானிகட்குத் தரிசனம். பஞ்சகிருத்தியத்தின் பொருட்டு அருள் காரணமாகச் சுத்தமாயையிற் கொண்டருளுந் திருமேனி கடவுளுக்குப் பொதுவிலக்கணம். இது யோகிகட்கும் கிரியையி லந்தரியாக பூசையுடையவர்கட்குந்

தரிசனம். இத்திருமேனி அருவம், அருவுருவம், உருவமென மூன்றுவகைப்படும். அவற்றுள் அருவம் நாதம், விந்துவென இரு வகைப்படும். இது யோகிகட்கேயன்றி கிரியையாளர்க்குத் தரிசனமாகாது. அருவுருவம் சதாசிவமூர்த்தம். இதனைக் குறிப்பது சிவலிங்கம். உருவம் மகேஸ்வர மூர்த்தம் இது இருபத்தைந்து வகைப்படும். அறுபத்து நான்கு வகைப்படுதலுமுண்டு. இதனைக் குறிப்பது சந்திரசேகரர் முதலான மூர்த்தங்கள். இம்மூர்த்தங்கள் யாவும் பிறிதோரண்டத்திற் பேசுந் தெய்வங்களாகவேயுள்ளன வென்பது உண்மை நூற்றுணிபு. பக்தர்களின் பொருட்டுக் கொண்டருளு மற்புதத் திருமேனிகளுஞ் சிவலிங்காதி மூர்த்தங்களும் பொது விலக்கண மெனப்படும்.

இவ்விலக்கணங்கள் கடவுளுக்குண்டென நூல் வழியாயறிவதோடு நில்லாது ஞானசாதனங்களை யநுட்டிப்பின் அநுபவமாய்த் தோன்றும். இது காறும் கூறியவற்றால்,

கடவுளிலக்கணமென்பது இருமொழிகள்சேர்ந்த ஒரு தொடர்மொழி யென்பதூஉம், கடவுளென்னுஞ் சொற்கு கட பகுதி உள் விகுதி யென்பதூஉம், பகுதிக்கு கடத்தல் பொருளென்பதூஉம், அது பசு, பாசங்களைக் கடத்த லென்பதூஉம், கடத்த லென்றதனானே கலத்தலுங் கொள்ளப்படு மென்பதூஉம், கலந்துங்கடந்தும் நிற்றல், காணுமுபகாரம், காட்டு முபகாரங் கருதி யென்பதூஉம், இலக்கணம் சிறப்பு, பொதுவென இருவகைப்படுமென்பதூஉம், சிறப்பு வியாபக வெளியென்பதூஉம், பொது மூவகைத் திருமேனிகளென்பதூஉம் பிறவுமாம்.

பொ. முத்தையபிள்ளை.

சமாசாரக்கொத்து.

நாச்சியாபுரம் செந்தமிழ் வாசகசாலை.

நிகழும் பரிதாபி௵ பங்குனிமீ ௧௬௨ மங்களவாரத்தன்று மாலை மூன்று மணிக்குக் கூடிய மகாசபையில் ஆண் பெண்ணிருபாலர் சுமார் (300) பேர் கூடியுள்ளார்கள். சபையார் வேண்டுகோளிற்குமுற்கொண்டு அவ்வாசகசாலைத்தலைவர் மிஸ்டர் சுப.ராம. நாச்சியப்பசெட்டியார் கேட்டுக்கொண்டபடி உபயபாஷா பாரங்கதரான மகிபாலன்பட்டி மஹாவித்வான் ஸ்ரீமத். மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் இன்னகர், ப்ரும்மஸ்ரீ இராமசாமி பாவலரவர்கள் "கல்வி" என்ற விஷயத்தைப்பற்றியும், கல்லுப்பட்டி சம்ஸ்கிருதபண்டிதர் ப்ரும்மஸ்ரீ நாராயணஸாஸ்திரியாரவர்கள் "பரோபகாரம்" என்ற விஷயத்தைப்பற்றியும், சொக்கலிங்கம்புதூர் மாணிக்கவாசக வித்தியாசாலைப் போதகாசிரியர் ப்ரும்மஸ்ரீ ரா. இராமமூர்த்தி ஐயர் அவர்கள் "பழவினையின் பயன்" இன்னதென்பதையும், தேவகோட்டை சைவப்பிரகாச வித்தியாசாலைப்போதகர் ஸ்ரீமத். சி. நாகலிங்கம்பிள்ளையவர்கள் "சைவம்" என்ற விஷயத்தையும், இன்னகர் மாணவர் ப்ரும்மஸ்ரீ நாராயணஐயர் அவர்கள் "நயவஞ்சகம்" என்பதையும், வயி. அ. நாச்சியப்பசெட்டியார் "இன்சொல்" என்பதையும், எம். சோமசுந்தரம் செட்டியார் "பெற்றோர்ப் பேணல் என்பதையும், பழ. கரு. சுப. ரெங்கநாதன் "இல்லறம்" என்பதையும், பெரி. நாக. நாச்சியப்பன் "கற்பு" என்பதையும், பெரி. பெ. நா. நாச்சியப்பன் "அருள்" என்பதைப்பற்றியும், சபையோர்களுக்கு கல்விப்பொருட்கள் அதிநுட்பமாயும் கேட்போருள்ளத்தில் மெய்ப்பாடு தோன்றும்படிக்கு மிக்க இனிமையாகப் பேசினார்கள். தேவகோட்டை அரு. அரு. சோம. சைவப்பிரகாச வித்தியாசாலை தேவார ஓதுவார் அவர்களால் இடையிடையே தேவாராதி அருட்பாக்கள் பண்ணுடன் ஓதப்பெற்றன. பிறகு, சபாநாயகர் அவர்கள் எல்லா உபந்நியாஸங்களிலுமுள்ள சாரங்களை எடுத்து விரிப்பன விரித்துக்கூறி சபையோரைமகிழ்வித்தார்கள். பின்னர் அச்செந்தமிழ் வாசக சாலைத்தலைவர் ஸ்ரீ சுப. ராம. நாச்சியப்ப செட்டியாரவர்கள் சபாநாயகரவர்கட்கும் உபந்நியாசகர்கட்கும் சபையோர்கட்கும் வந்தனங்கூறி சபாநாயகர் அவர்கட்கும் வித்வசிரோமணிகட்கும் பூமாலைபுனைந்து எல்லோருக்கும் சந்தனதாம்பூலம் கொடுத்துபசரித்தார்கள். இரவு 8-30-க்கு சபை நிறைவேறியது. சுபம்!

கண்டு மகிழ்ந்தோன்.

ஜப்பானில் மூங்கிலிலிருந்து காகிதம் செய்தல்:—ஜப்பானில் புதிதாய் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. தொழில் முயற்சிகளில் மூங்கிலை உபயோகத்துக்குக் கொண்டுவருவதே அந்தக் கம்பெனியின் நோக்கம். ஜப்பானிலுள்ள கோப் நகரத்துக்கு அருகிலுள்ள ஒரு சாஸ்திர ஆராய்ச்சி சாலையில் அநேக சோதனை முறைகளைச் செய்து திருப்தியடைந்து, அந்தக் கம்பெனியார் பார்மோஸாத் தீவில் 8000 ஏக்ரா பூமியாகிய மூங்கில் வளர்ந்த காட்டை நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 300 டன் மூங்கிலை வேலை செய்வதற்குத் தகுந்த ஒரு தொழிற்சாலையை இப்பொழுது காகி என்ற பட்டணத்துக்கு அருகில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

டெல்லிபோன் (Telephone) இயந்திரத்தின் நூதன உபயோகம்:—இந்த இயந்திரத்தால், சமாசாரங்கள் பேசிக்கொள்வதை நாம் அறிவோம். ஒரு தாயார் தன் குழந்தையை விட்டு வேறு இடத்திற்குப் போயிருந்தாள். அப்போது, குழந்தை அழுதது. அதை அங்கிருந்த வேலைக்காரி, தாயாருக்கு டெல்லிபோன் மூலம் தெரிவித்தாள். தாயார் குழந்தையின் காதின் அருகாமையில், டெல்லிபோனை வைக்கும்படி திரும்பத் தெரிவித்தாள். உடனே டெல்லிபோன் மூலமாய் தாயார் ஒரு தாலாட்டுப்பாட்டைப்பாடி அக்குழந்தையைத் தூங்கும்படி செய்தாள். பின் தான் போன காரியத்தை முடித்துக் கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பினாள். அதுவரை அக்குழந்தை நன்றாய்த் தூங்கியதாம்.

ஆல்ப்ஸ் மலையைக் கடந்தவர்:—சில தினங்கட்குமுன் பிலோவுகோ என்னும் ஓர் ஆகாயவிமானி தமது ஆகாயவிமானத்தில் ஸ்விஸ்ர்லாண்டு தேசத்திலேறி ஆல்ப்ஸ மலையைக் கடந்து அதன் தெற்குப்பக்கத்தில் 25 நிமிஷத்தில் வந்திறங்கினார்; ஆல்ப்ஸ் மலையென்பது ஏறக்குறைய இமயகிரிபோன்றதாம். அவர் ஆல்ப்ஸ் மலையை ஆகாய விமான வாயிலாகக் கடந்து பிழைத்திறங்கியது அருமையிலும் அருமையாம்.